[12th February 1959

(ஆ) இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கும் சென்னை சர்க்காருக்கும் ஏதாவது கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்றுவரின், அவ்விவரங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : "ஒன்றே குலம்" என்ற படத்தை வாங்குவதற்கு ஆன தொகையை தீண்டாமை ஒழிப்பு நிதியிலிருந்து கொடுக்கும்படி நமது சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : பதிலிலேயே சொல்லி இருக்கிறேன். அது பரிசீலனையில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது இயலாத காரியம்.

Homoeopathy system of medicine

* 280 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government intend to recognize and encourage homoeopathy; and

(*b*) the help this Government intend to give to Siddha (சித்த வைத்தியம்) method of treatment ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The question of recognizing the homoeopathis system of medicine is under the consideration of Government.

(*b*) The Sidha System is taught in the Government College of Integrated Medicine and treatment under that system is also being given in the Hospital of Integrated Medicine.

SRI K. SATTANATHA KARAYALAR : சித்த வைத்தியம் செய்பவர்களை ரிஜிஸ்டர் செய்ய ஒரு லிஸ்ட் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த அடிப்படையில் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சித்த வைத்தியம் மாத்திரம் அல்ல, உள்நாட்டு முறையிலே வைத்தியம் செய்கிறவர்கள் சில வருஷகாலத்திற்குப் பழக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகள் இருக்கின்றன. இந்த விதிகளுக்கு உட்பட்டிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறது.

SRI N. K. PALANISAMI : ஹோமியோபதி வைத்தியப் பயிற்சிக்குத் தனியாக ஒரு கல்லூரி ஏற்படுத்த சர்க்காரில் ஆலோசனை இருக்கிறதா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப் பற்றி சென்னையில் ஹோமியோபதி அசோசியேஷன், ஒரு காலேஜ் ஆரம்பிக்க யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்தால் அரசாங்கம் அதைக் கவனித்து என்ன செய்யமுடியும் என்று தீர்மானிக்கும்.

12th February 1959]

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஹோமியோபதி சித்த வைத்தியம் முதலியவற்றால் சீக்கு வந்த மனிதனுக்கு சிகிச்சை அளிக்கலாம் என்றாலும், வியாதியே வராமல் இருக்க ஆசனப் பயிற்சி அவசியமானது என எல்லோராலும் சொல்லப்படுவதால் அந்தப் பயிற்சியை எல்லோருக்கும் அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

MR. SPEAKER : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். ஹோமியோபதிக்கும் ஆசனத்துக்கும் சம்பந்தம் இல்லை.

Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—CALLING ATTENTION TO THE CLOSURE OF BEEDI FACTORIES.

MR. SPEAKER : சட்டசபை விதிகளில் ரூல் 40 பிரகாரம் ஸ்ரீ. எம். கல்யாணசுந்தரம், ஸ்ரீ. எம். எஸ். செல்வராஜன், ஸ்ரீமதி 10-00 a.m.
ராஜாத்தி குஞ்சிதபாதம் ஆகிய மூன்று பேரும் பீடித் தொழில் சம்பந்தமாக விவாதிக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இதில் சட்டப்பிரகாரம் ஒருவர் தான் பேச முடியும். முதலில் நோட்டீஸ் கொடுத்தது ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம். ஆதலால் அதுபற்றி அவரைப் பேச அழைக்கிறேன்.

SRI M. KALYANASUNDRAM : நேற்று நான் கொடுத்திருந்த கேள்வி ஒன்றுக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கக் கூடிய காரணத்தினாலும், பீடித் தொழிலாளர்கள் அதிகமாகப் பாதிக்கப் பட்டிருக்கிற தொகுதியைச் சேர்ந்த ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் பேசுவதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் விட்டுக் கொடுக்கத் தயார்.

MR. SPEAKER : இரண்டாவதாக நோட்டீஸ் கொடுத்தவர் ஸ்ரீ எம். எஸ். செல்வராஜன் அவர்கள் தான். ஆகவே அவரைப் பேச அழைக்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் பேசுவதாக இருந்தால் நான் விட்டுக்கொடுக்கிறேன். எனக்கும் களைப்பாக இருக்கிறது.

MR. SPEAKER : உங்களுக்கு எல்லாம் கஷ்டமாக இருந்தால் ஸ்ரீமதி குஞ்சிதபாதம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM : கனம் சபாநாயகர் அவர்களே இந்தப் பிரச்னை வெகுவாக திருநெல்வேலியில் வாழ்கின்ற தொழிலாளர்களை பாதிப்பதால் இந்தப் பிரச்னை பற்றிப் பேசுவதற்கு அனுமதி கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் பீடி இறக்குமதியை கொழும்பு சர்க்கார்—இலங்கை சர்க்கார்—தடை செய்திருப்பதால் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள மேலபாளையம் தொழிலாளர்கள் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய சர்க்கார் 15–1–1957-ல் இலங்கை சர்க்காருடன் செய்து கொண்ட அக்ரிமெண்ட் பிரகாரம் படிப்படியாக இந்த இறக்குமதியை இலங்கை சர்க்கார் குறைத்துக் கொள்வது என்கிற அடிப்படையில் இந்தப் பிரச்னை இன்று எழுந்திருக்கிறது. அதோடுகூட அப்படிப்பட்ட ஒரு அக்ரிமெண்டை இந்திய சர்க்கார் அவர்களோடு செய்து கொண்டபோது இந்திய சர்க்காருக்கும் சரி, இலங்கை சர்க்காரும் சரி இது சம்பந்தப்பட்ட தொழிலாளர்களையோ, வியாபாரிகளையோ கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். அப்படி ஆலோசிக்கவில்லை